ஸ்ரீ

அரவிந்தர் அருளிய

அன்னை

(THE MOTHER)

சுத்தானந்தர் தமிழ்

புதுயுக நிலயம், புதுச்சேரி.

ஸ்ரீ அரவிந்தர் அருளிய

அன்னை

THE MOTHER

சுத்தானந்தர் தமிழ்

புதுயுக நிலையம்
புதுச்சேரி.

நாலாம் பதிப்பு—1947

விலை : எட்டணு

அரவிந்த ஆஸ்ரமம் அச்சகம்
புதுவை

161/47/1500

ஸ்ரீ அன்னை வாழ்த்து

(சிந்து பைரவி—திஸ்ர ஏகம்)

இன்ப வாரி தன்னிலே
எழுந்த சோதி யென்னவே
அன்பு மய மான சக்தி
அன்னை வாழ்க வாழ்கவே ! இன்ப

குமுத மான செங்கணுள்
குளிர்ந்த பார்வை கொஞ்சிடும்,
அமுத மான புன்னகை
அழகு சொட்டும் இந்திரை இன்ப

தங்க மான மேனியாள்,
சமதை கொண்ட நெஞ்சினுள்,
பொங்கு மங்க லம் புரிந்து
போற்றிடும் திருமகள் இன்ப

அரக்கரின் கொழுப்பினை
அடக்கிடும் பயங்கரி ;
மறக் கருணை கொண்ட சண்டி
வல்லமை தருவளே இன்ப

சுற்றிடும் பகைத் திரள்
சுருண்டு வீழப் போரினில்
வெற்றி நல்கும் பத்ர காளி
வீரை, நீலி, சூலியே இன்ப

ஜீவ யாழிற் பேரின்பம்
செழிக்க, மெய் சிலிர்க்கவே,
காவியங்கள் மீட்டு கின்ற
கமல வாணி போற்றியே இன்ப

வேந்தரும் வணங்கிடும்
விமலத் தாய் மஹேஸ்வரி-
சாந்த மோங்க வாழ்விலே
தனிக் கருணை நாட்டவே இன்ப

ஸ்ரீ அரவிந்தர் அருளிய

அன்னை

1. ஆர்வமும், அருளும்

இரண்டு சக்திகளின் சேர்க்கையாலேதான் நமது முயற்சியின் அரியபெரியநோக்கம் நிறைவேறும்—கீழிருந்து, நிலையாக, விடாமற் கூவும் ஆர்வம், மேலிருந்து சுரக்கும் பேரருள்.

ஆனால், ஒளியும், உண்மையும் துலங்கும் நிலையிலே தான் பேரருள் சுரக்கும்; பொய்யும், மடமையும் இடும் கட்டுப்பாடுகளுக்கு அஃது உட்பட்டு நடக்காது. ஏனெனில், பொய்யின் வேண்டுதலுக்கு இணங்குவதாயின், அது தன் காரியத்தையே முறியடிக்கும்.

ஒளியும், உண்மையுமான நிலைகள் இவையே; இவற்றிற்கு உட்பட்டாலே, பராசக்தி இறங்கி வரும்: அதி உன்னத **விஞ்ஞான சக்தி மேலிருந்து இறங்கலும், கீழிருந்து மலர்தலுமே** தூலவியல்பை வெற்றிபெறக் கையாண்டு, அதன் இடர்களை முறியடிக்கும்.......முழுமையான, உண்மையான **அடைக்கலம்** வேண்டும்; தெய்வ சக்திக்கு முழுமையாகத் தன்னை மலர்த்தவேண்டும்; இறங்கும் உண்மையை, சதா மனப்பூர்வமாக ஏற்க வேண்டும்; மன, வீரிய, தூலப் பகைவன்மைகளும், தோற்றங்களும் இன்னும் உலகியல்பை யாளுகின்றன; அவற்றின் பொய்மையை முழுதும், இடைவிடாது விலக்கவேண்டும்.

அடைக்கலம் முழுமையாக, ஜீவனின் சகல பாகங்களையும் பற்றியதாய் இருக்கவேண்டும். அதை, இதய புருஷன்

ஏற்று, புத்தி ஒப்புவதுமட்டும் போதாது; அல்லது உள் ளுயிர் அதற்கிணங்கி, உள்ளுடல் அதை யுணர்ந்தால் மட்டும் போதாது. நமது வாழ்வின் எப்பங்கிலும், மிக வெளிப்புறத் திலும், எதும், கரவிருக்கக் கூடாது; ஐயம், கலக்கம், சூது-வாதுகள், எதிர்ப்பு, மறுப்பு இவற்றை ஒளித்து வைக்கும் எதுவுமிருக்கக்கூடாது.

ஜீவனின் ஒரு பகுதி வணங்கி, மற்றொரு பகுதி பிகு பண்ணித் தன் வழியே சென்று, சுய நிர்ணயங்களைச் செய்து கொண்டிருந்தால், அப்படியாகும் ஒவ்வொரு முறையும், நீயே கடவுளருளை உன்னிடமிருந்து ஒதுக்கித் தள்ளுகிறாய்.

உனது அன்பிற்கும், அடைக்கலத்திற்கும் பின்னே, உனது ஆசைகளையும், அகங்கார வேண்டுதல்களையும், உயிர்ப் பிடிவாதங்களையும் மறைத்துவைக்காதே; உண்மை ஆர்வத் திற்குப் பதில் இவற்றை வைத்தால், அல்லது இவற்றை அதனோடு கலந்து தெய்வசக்தியின் மீது சுமத்த முயன்றால், உன்னை உருமாற்ற, தெய்வ சக்தியை உபாசிப்பது வீணாகும்.

உன்னை ஒருபுறம் அல்லது ஒருபங்கு உண்மைக்குத் திறந்து, மறுபுறம் அடிக்கடி அசுர சக்திகளுக்குக் கதவு திறந்துகொண்டிருந்தால், உன்னிடம் தெய்வக் கிருபை நிலைக்க எதிர்பார்ப்பது வீணேயாகும். அந்த ஜீவ ஸாநித் யத்தை நாட்ட வேண்டினால், நீ கோயிலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு முறையும் உண்மையைக் கொண்டு சக்தி உன்னுட் புகும்போது, நீ அதைப் புறக்கணித்து, விரட்டிய பொய்யை மீண்டும் ஏற்றால், உன்னை விலகியதற்காகக் கடவு ளருள்மீது குறை சொல்வதற்கில்லை. உன் இச்சையின் அபத்தம், அடைக்கலத்தின் அபக்குவம் இவற்றையே குறை சொல்லவேண்டும்.

நீ உண்மையை அழைத்தும், உன்னுள் ஏதோ வொன்று, பொய், மடமை, நாஸ்திகமானதை ஏற்றால், அல்லது அதை முழுதும் விலக்க மனமில்லா திருந்தால், பகைவன்மைகள் எப்போதும் உன்னைத்தாக்கும். அருள்

உன்னிடமிருந்து விலகும். முதலில் உன்னிடமுள்ள பொய் அல்லது கரவைக் கண்டுபிடித்துப் பிடிவாதமாக விலக்கு. அப்போதே உன் ரூபாந்திரத்திற்குத் தெய்வ சக்தியை வேண்டுவது சரியாகும்.

தெய்வார்ப்பணமான வீட்டில் மெய்யும்-பொய்யும், ஒளியும்-இருளும் சரணும்-சுயநலமும் சேர்ந்திருக்க விடப்படு மென்று ஊகிக்காதே. **ரூபாந்தரம் பூரணமா யிருக்க வேண்டும்;** ஆதலின், அதைத் தடுக்கும் அனைத்தையும் பூரணமாக ஒழிக்கவேண்டும்.

பரமன் ஆணைகளை நிறைவேற்றுமல்கூட, நீ கேட்டது மே தெய்வ சக்தி உனக்கு எல்லாம் செய்யும், செய்தே தீரவேண்டும் என்னும் பொய்க்கொள்கையை விட்டுவிடு. உனது சரணை உண்மையாக, பூரணமாகச் செய். பிறகே உனக்கு மற்றதெல்லாஞ் செய்யப்படும்.

உனக்காக **அடைக்கலத்தையும்** தெய்வசக்தியே செய்யு மென்னும் அசத்திய, தாமச உத்தேசத்தை விலக்கு. அவளுக்கு உன் சரணைப் பரமன் வேண்டுகிறான்; உன்னை **வற்புறுத்தவில்லை.** நிலையான ரூபாந்தரம் வருமட்டும், எந்த நிமிஷமும், கடவுளை மறுத்து விலக்கி, ஆத்ம நிவே தனத்தை விடுக்க உனக்குச் சுயேச்சை யுண்டு. அப்படிச் செய்வதன் அத்யாத்மப் பலனை நீ அநுபவிக்கவேண்டும். நீயே சுயேச்சையாகச் சரண்புகவேண்டும்; அது ஜடமான பொம்மை அல்லது யந்திரக் கருவிபோலின்றி, ஓர் உயிருள்ள **ஜீவனின்** சரணாகதியாயிருக்கவேண்டும்.

ஜடமாகச் **சும்மா** விருத்தல், உண்மை யடைக்கலத் துடன் அடிக்கடி குழப்பப்படுகிறது; ஆனால், ஜட நிச்சலத்தி னின்று உண்மையுந் திண்மையுமான எதுவும் வாய்க்காது. தூலப்பிரகிருதியின் ஜடமந்தமே அதை ஒவ்வொரு தாமத, அசுர பலத்திற்கும் அடிமையாக்குகிறது. மகிழ்வும், உறுதி யும், பயனுமுள்ள இணக்கமே தெய்வ சக்தியின் காரியத் திற்கு வேண்டப்படுகிறது; சத்திய ஜோதிபெற்ற சிஷ்யனை யும், பொய்யையும் இருளையும் பொருதும் ஆத்மவீரனையும்,

நன்றியுள்ள தெய்வத் தொண்டனையும் போன்ற பணிவே வேண்டும்.

இதுவே மெய்நிலை; அதை மேற்கொண்டு காக்க முடிந்தவர்களே, ஏமாற்றங்களாலும், இடர்களாலும் அசையாவுறுதியாளராகி, சோதனையைத் தாண்டி, உன்னத வெற்றியும், மகத்தான ரூபாந்தரமும் பெறுவர்.

2. மூன்று முயற்சிகள்

உலகில் எது நடந்தாலும் ஆண்டவனே தனது சக்தியின் மூலம் சகல காரியங்களுக்கும் பின்னேயுள்ளான்; ஆனால், அவன் தனது யோக மாயையால் மறைக்கப்பட்டு, கீழியல்பில், ஜீவாகங்காரத்தின் மூலம் செயல்புரிகிறான்.

யோகத்திலும், சாதகனும், சாதனமும் தெய்வமே; ஒளி, ஆற்றல், அறிவு, உணர்வு, ஆனந்தம் பொருந்திய தெய்வ சக்தியே ஆதாரத்திற் செயல் புரிகிறாள்; ஆதாரம் அவளுக்குத்திறந்தபோது, அவளே மேற்சொன்னதெய்வத் திறமைகளுடன் அதிற் பொழிந்து, சாதனத்தைச் சாதிக்கிறாள். ஆனால், கீழியல்பு சுறுசுறுப்பா யிருக்குமட்டும், சாதகனின் சொந்த முயற்சி வேண்டியிருக்கிறது.

ஆர்வம், விலக்கல், அடைக்கலம்—இவையே முப்பாண்மையான சொந்த முயற்சியாம்.

ஆர்வம் : — இது விழிப்பும், நிலைப்பும், தொடர்புமுள்ளதா யிருக்கவேண்டும்—அது மனோசங்கல்பம், இருதயாநுசந்தானம், பிராண சம்மதம், உடலுணர்வையும், இயல்பையும் அதற்கு மலர்த்தி இளக்கும் திடவுறுதி இவற்றுடன் கூடியிருக்கவேண்டும்.

விலக்கல் : — அபரப்பிரகிருதியின் விருத்திகளை விலக்க வேண்டும்—நிச்சலமான மனத்தில் உண்மை யறிவு சுதந்திரமாக இடம் பெற, மனோபாவனைகள், அபிப்பிராயங்கள், அபிருசிகள், பழக்கங்கள், கற்பனைகள் இவற்றை விலக்க வேண்டும்; அமைதியும், விரிவும், திறமையும், நிவேதனமும் கொண்ட வீரிய தேகத்தில் சத்திய சக்தியும், ஆனந்தமும் மேனின்று பொழிய, வீரிய வியல்பின் ஆசைகள், கோரிக்கைகள், தினவுகள், பரிசங்கள், வெறிகள், சுயநலம், செருக்கு, மமதை, காமம், பேராசை, குரோதம், பொறாமை,

சத்திய விரோதம் இவற்றை விலக்கவேண்டும்; மேன் மேலுந் தெய்வத் தன்மையில் வளரும் உடலில், ஜோதி, சக்தி, ஆனந்தம் இவற்றின் உண்மையுறுதி நிலைக்க, தூலவியல்பின் மூடத்தனம், சந்தேகம், அவநம்பிக்கை, இருள், பிடிவாதம், சிறுமை, சோம்பல், மாறுதல்விரும்பாமை, தமஸ் இவற்றை விலக்கவேண்டும்.

அடைக்கலம்: —தான், தன்மை, தனது என்பதும், எல்லா உணர்வு நிலைகளும், ஒவ்வோரியக்கமும், தெய்வத்திற்கும், சக்திக்கும் அடைக்கலமாகவேண்டும்.

ஆத்ம ஸ்மர்ப்பணம், ஆத்ம நிவேதனம் இவற்றின் வளர்ச்சிக் கேற்றபடியே, தெய்வ சக்தி மேண்மேலும் தன்னையே அவனுட்பொழிந்து, தெய்வ சம்பத்தின் சுதந்திரத்தையும், பூரணத்தையும் அவனுள்ளே நிலைநாட்டிச் சாதனம் செய்வதைச் சாதகன் உணர்கிறான். அவனது சொந்த முயற்சிக்குப் பதிலாக, இந்தச் சேதன விருத்தி பெருகப் பெருக, அவனது முன்னேற்றம், உண்மையும் வேகமும் அடைகிறது. ஆனால், முடிமுதல் அடிமட்டும் அடைக்கலமும், ஆத்ம நிவேதனமும், சுத்தமாகவும் சம்பூர்ணமாகவும் இருக்குமட்டும், சொந்த முயற்சியின் அவசியத்தைச் சக்தி ஈடுசெய்ய முடியாது.

கட்டளைகளை நிறைவேற்ற மறுத்துக், கடவுளையே அனைத்தையுஞ் செய்ய முறையிட்டுத் தான் ஒன்றும் வருந்தி முயலாமல் தப்பிக்கும் தாமத அடைக்கலம் ஏமாற்றமானது; அது முக்திக்கும், சித்திக்கும் நடத்தாது.

3. கருணையும், காப்பும்

அச்சம், அபாயம், அழிவு இவையின்றி க்ஷேமமாக வாழ்வில் முன்னேற, எப்போதும் இணைபிரியாத இரண்டு துணைகளே வேண்டும்—(1) தெய்வத் தாயின் திருவருள், (2) நம்பிக்கை, சிரத்தை, சமர்ப்பணம் இவற்றுடன்கூடிய அந்தக்கரணம். உனது நம்பிக்கை தூய்மையுந் தெளிவும், நிறைவுமாகுக. துராசை, செருக்கு, இடம்பம், அகம்பாவம், வீரிய ஆணவம், சொந்த வேண்டுகோள், கீழியல்பின் அற்பதிருப்திகளுக்கு ஆசைப்படல், முதலியவற்றால் மாசுற்ற மன, வீரிய தேகத்தின் அகங்கார நம்பிக்கை இழிவானது ; அது, புகை மூடிய மந்தத் தீப்போல விண்ணோக்கிச் சுடரோங்காது. தெய்வப் பணிக்காகவும், தெய்வ விளக்கத்திற்குத் துணை செய்யவுமே உன் வாழ்வு உனக்கு அளிக்கப்பட்டதெனக் கருது. சுத்தம், சக்தி, ஜோதி, விசாலம், சாந்தம், தெய்வ சேதனானந்தம், உடலுயிர் மனத்தை அது புத்துருவாக்கியே தீருதல்—இவற்றைத் தவிர வேறொன்றையும் விரும்பாதே. தெய்வீக, அத்யாத்ம, விஞ்ஞானவுண்மை உலகிலும், உன்னுளும், உள் அழைப்பால் வந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரிடமும் அதன் சித்தி, அதன் சிருஷ்டிக்கேற்ற பரிஸ்திதி, எதிர்க்கும் விரோத பலங்களின்மீது அதன் வெற்றி—இவற்றைத் தவிர வேறொன்றுங் கேட்காதே.

உனது சிரத்தையும், ஸ்மர்ப்பணமும் மாசற்றதாகவும், பூரணமாகவு மிருக்கட்டும். உன்னையே நீ தரும்போது, இச்சை, கட்டுப்பாடு, பிடித்தம் எதுவுமின்றித் தா ; அதனாலேயே உன்னதெல்லாம் தெய்வத்தாயைச் சேரும் ; அகங்காரத்திற்கும், அன்னிய சக்திக்கும் ஒன்றும் மிஞ்சாது.

உனது நம்பிக்கையும், சிரத்தையும், ஸ்மர்ப்பணமும் நிறைவாக ஆக, அன்னையின் கருணையும், ரக்ஷையும்

உனக்கெய்தும். **தெய்வத்தாயின் கருணையும் ரகைஷயும் உனக்குண்டானல், உன்னை எது தீண்ட முடியும்? அல்லது யாருக்கே நீ அஞ்சவேண்டும்?** அவள் கருணை ஒரு சிறி திருப்பினும், இடர்கள், தடைகள், அபாயங்களனைத்தி னின்றும் உன்னைத் தாண்டுவிக்கும்; அதன் **பூரண ப்ரஸன்னமும்** சூழ்ந்தால், கவலையற்று, அச்சமற்று எந்த மிரட்டுக்கும் அஞ்சாமல், இவ்வுலகம் அல்லது காணுவுலகங் களினின்று வரும் எப்படிப்பட்ட வலிய பகைக்கும் கலங்கா மல், நீ உன் வழியே முன் செல்லலாம். ஏனெனில், அது அவள் வழி. அவளது கருணை ஸ்பரிசம் இடர்களை நல்ல சந்தர்ப்பங்களாகவும் தோல்வியை வெற்றியாகவும், மெலிவைத் தளராவலிமையாகவும் மாற்றும். ஏனெனில், தெய்வத்தாயின் கருணை, பகவான் அநுமதியைப்பெற்றது. இன்றேனும், நாளையேனும் அதன் பயன் நிச்சயம், சித்தம்; அஃது இன்றியமையாதது, எதிர்க்க முடியாதது.

4. பணம்

பணம் ஒரு விஸ்வசக்தின் ஸ்தூலச் சின்னமாகும்; இந்தச் சக்தி உலகில் விளங்கி, பிராண, ஸ்தூல க்ஷேத்திரங்களில் செயல்புரிகிறது; இது புறவாழ்வின் நிறைவிற்கு இன்றியமையாதது. மூலத்திலும், உண்மைச் செயலிலும் அது தெய்வத்திற்கே உரியது. ஆனால், அது மற்ற தெய்வ சக்திகளைப் போலவே இங்கு நியமிக்கப்பட்டு, கீழியல்பின் மடமையால், அகந்தையின் பயனுக்காக அபகரிக்கக்கூடியதாகிறது; அல்லது அசுர ப்ரபாவங்களின் பிடியிலகப்பட்டு, அவற்றின் காரியத்திற்கே துர்வினியோகமாகிறது. மனிதனின் அகம்பாவத்தையும், அசுரனையும் பலமாக ஆகர்ஷித்து, உடையோர் பொதுவாய் தப்பாக வைத்து, துர்விநியோகம் செய்யும் அதிகாரம், செல்வம், காமம் ஆகிய மூன்று சக்திகளில் பணமும் ஒன்று. பொருள் தேடுவோரும், வைத்திருப்போரும், அதிகாரிகளாவதைவிட, அதற்கே அடிமைகளாகிறார்கள். அது நீண்டகாலம் அசுரன் கையிற் சிக்கித் துர்விநியோகமாகிறது. தோஷ உபாதியின் முத்திரையைத் தாங்கி நிற்கும் அதனின்று, முற்றிலுந் தப்பினோர் மிகச் சிலரேயாவர். இக்காரணத்தாலேயே, பூரணமான தன்னடக்கம், பற்றின்மை, தனபாசத்துறவு, மமதை வேட்கையுடன் பணம் வைத்திராமை முதலியவற்றைப் பெரும்பாலான ஆத்ம நியமங்கள் வற்புறுத்துகின்றன. பணமும், செல்வமும் பாபமெனத் தடுத்து, எளிய, வறிய வாழ்வே ஆத்ம நியமமென்று சில மார்க்கங்கள் உபதேசிக்கின்றன. ஆனால், இது ஒரு பிழை; அது சத்ரு பலங்களின் கையில் அதிகாரத்தை விட்டுவிடுகிறது.

பணம் தெய்வத்திற்கே யுரியது; அதை மீண்டும் தெய்வத்திற்கே வென்று, தெய்வ வாழ்விற்கே, தெய்வீகப் பயன்படுத்த வேண்டும்: இதுவே சாதகனுக்கு விஞ்ஞான

வழியாம். தன சக்தி, அது தரும் சாதனங்கள், அதனு லெய்தும் பொருள்கள் இவற்றினின்று வைராகிபோலே விலகக்கூடாது. ஆனுல், அவற்றிடம் ராஜஸப்பற்றை, அல்லது அவற்றின் போகத்தில் ஒரு அடிமைச் சோம்பேறித் தனத்தை வளர்க்காதே. அன்னைக்காக மீண்டும் வென்று, அவள் காரியத்திற்கே நிவேதிக்கும் ஒரு சக்தியாகவே செல்வதைக் கருது.

எல்லாச் செல்வமும் இறைவனதாம்! அதை வைத் திருப்பவர், அதன் காப்பாளரே யன்றி எஜமானரல்லர். இன்று அது அவரிடமுள்ளது; நாளையே அது வேறிடஞ்சென் றிருக்கலாகும். தங்களிடம் அது இருக்கும்போது, தமது பொறுப்பை எவ்விதம் வகிக்கிறுர்கள், எந்த நோக்கத் துடன், எவ்வுணர்வுடன், அதைச் செலவிடுகிறுர்கள் எக் காரியத்திற்காக என்பதிலேயே எல்லாம் இருக்கிறது.

உன் சொந்தத்திற்குப் பணம் உபயோகிக்கும்போது, உன் உடைமை, வருவாய், நீ கொண்டுவருவது அனைத்தும் அன்னைக்குரியதென்றே கருது. வலியக்கேட்காதே; அவள் தருவதை ஏற்று, அவள் குறித்த காரியங்களுக்கே அதைப் பயன்படுத்து. முற்றுஞ் சுயநலமற்று, மிகவும் சாவதான மும், அளவும், ஆழ்ந்தகவனிப்புமுள்ள நல்ல காப்பாளியா யிரு. நீ கையாளுவது, உன் சொந்தமல்ல, அவள் உரிமை களேயென்பதை எப்பொழுதும் நினை. மேலும், அவளுக் காகப் பெற்றதைச் சிரத்தையுடன் அவள் முன் வை; உனது அல்லது வேறு எவர் காரியத்திற்கும் அதைத் திருப்பாதே.

பணமிருக்கிறதென்று மனிதரை அபேக்ஷிக்காதே; ஆடம்பரம், அதிகாரம், செல்வாக்கு இவற்றுல் மயங்காதே. அன்னைக்காக நீ கேட்கையில், தன்னுரிமையில் எள்ளளவே, உன்மூலம், அவளே வேண்டுகிறுள் என்பதை நீ உணர வேண்டும்; நீ கேட்கும் மனிதன், அவனது ஜவாபிற் கேற்றபடி மதிக்கப்படுவான்.

பணமாசின்றி, ஆனுல், எவ்விதமான ஸ்ந்யாஸ விரக்தியுமில்லா திருந்தால், தெய்வ காரியத்திற்காகப்

பணத்தையாள உனக்குப்பேராற்றலுண்டாகும். சமசித்தம், வலியக்கேளாமை, உன் உடைமை, வருவாய், ஈட்டுந்திறமை அனைத்தையும் தெய்வ சக்திக்கும், அவள் காரியத்திற்கும் நிவேதித்தல்—இவையே பணமாசின்றி, விடுதலை பெற்ற தற்கு அடையாளங்களாம். பணத்தையும், அதன் செலவை யும்பற்றி மனங் கலங்கலும், உரிமை பாராட்டலும், செட்டுப் பிடித்தலும், அபக்குவத்திற்கும், பந்தத்திற்குமே நிச்சய மான அடையாளமாம்.

இவ்விஷயத்தில், அவசியமானால், வறுமையிலும்,செம் மையாக வாழக்கூடியவனே, உத்தம சாதகனும். வறுமை அவனைக் கலக்காது ; தெய்வ சேதனத்தின் நிறைவான உள் விளையாட்டை அது தடுக்காது. செழிப்பாக வாழவேண்டி னால், அப்படியே அவன் வாழ முடியும் ; அவன் தன் செல் வத்திலும், போக்கியங்களிலும், ஒரு கணமும், சிறிதும் ஆசை அபிமானம் வைக்கமாட்டான், போகச்சோம்பலுக்கும் ஆட்படான் ; செல்வவுரிமையால், விளையும் பழக்கங்களுக் குத் தொத்தடிமையாகான். தெய்வ இச்சையும், தெய்வா னந்தமுமே அவனுக்கு எல்லாமாகும்.

விஞ்ஞான சிருஷ்டியில், பணத்திறமையைத் தெய்வ சக்திக்கே மீட்டு, தனது சிருட்டிவிழியால் தெய்வத்தாயே தீர்மானிக்கிறபடி உண்மை, அழகு அணி துலங்கும் ஓர் ஏற் பாட்டிற்கும், புதிய புனிதமான, உயிருடல் வாழ்வமைப் பிற்குமே பயனுக்க வேண்டும். ஆனால், அதை முதலில் அவளுக்காகவென்று மீட்க வேண்டும். இத்தன்மையில் உறுதி, தாராளம், செருக்கின்மை இவற்றுடன்கூடி, பாத்தியம் கொண்டாடாமல், பிடித்தம், தயக்கம் இல்லா மல் சரண்புகுந்தவர்களே செல்வத்தை வெல்ல மிகவுந் திறமையுள்ளவராவர் ; பராசக்திக்கு அவர்களே மாசற்ற திறமையுள்ள கருவிகளாவர்.

5. ஐக்கியாநுபூதி

நீ உண்மையான தெய்வத் தொண்டனுக விரும்பினுல், எல்லாஆசைகளினின்றும், அகம்பாவத்தினின்றும் முற்றிலும் விடுபடுவது உனது முதல் நோக்கமா யிருக்க வேண்டும். உனது வாழ்வனைத்தும் பரமனுக்கே நிவேதன மும், வேள்வியுமாகவேண்டும்; பணிசெய்து, ஏற்று, நிறை வேற்றி, தெய்வசக்தியின் காரியங்களில், அவளுடைய திரு விளக்கக் கருவியா யிருக்கும் குறிப்புடனேயே நீ செயல் புரியவேண்டும். உனதிச்சைக்கும், அவளிச்சைக்கும் எவ் வகை வேற்றுமையும் இருக்கக்கூடாது. அவளுடைய பிரே ரணையைத் தவிர உன்னுள் வேறு சங்கற்பமிருக்கக்கூடாது; உன்னுள், உன்னுல், அவள் அறிந்து செய்யும் செயலன்றி, வேறு செயலிருக்கக்கூடாது—நீ அவ்வளவு தூரம் கடவு ளுணர்வில் பக்குவமடையவேண்டும்.

இம் முழுத்தீவிர வொன்றிப்பும் உனக்கியலுமட்டும், அவள் பணிக்கே படைக்கப்பட்டு,அவளுக்கே எல்லாம் புரியும் ஆவியும், உடலுமாகவே உன்னைக் கருதவேண்டும். நீ தனி வினையாளி என்ற பாவனை, உன்னுள் பலமாயிருப் பினும், நீயே கர்மகர்த்தா என்றெண்ணினுலும், அப்போ தும் **அவளுக்கே** பணியைச் செய்ய வேண்டும். அகந்தை விருப்பில் அழுத்தஞ் செய்வதும், சொந்தலாபத்தை அவா வித்திரிவதும், அகம்பாவ ஆசையின் நிபந்தனையும், இயல்பி னின்றும் ஒழியவேண்டும். பலனைக் கேட்டலும், பரிசு தேடலுங் கூடாது; கடவுளன்னையின் மகிழ்வும்,அவள் காரிய சித்தியுமே உன் பலனுகும். நிலையான தெய்வ சேதன வளர்ச்சியும், சாந்தமும், பலமும், ஆனந்தமுமே உனது **பரிசு**. பணியின்பமும், பணிகளினுலே ஆத்ம வளர்ச்சி பெறும் களிப்புமே, சுயநலமற்ற தொண்டனுக்குப் போது மான கைம்மாருகும்.

ஆனல், மேன்மேலும், நீ கருவியே கர்த்தவல்லே என்றுணருங்காலம் வரும். ஏனெனில், நீ எப்போதும் ஏகாக்கிரத்துடன் அவள் கையில் அனைத்தையும் வைத்துவிட்டாற் போதும்; அப்போதே அவளுடைய துணையைப் பெறலாம்; அவளே ஆதேசமும், எழுச்சியும் தந்து, இன்ன காரியம், இப்படிச் செய்யவேண்டும், அதன் பலன் இன்னது எனக் குறிப்பாள். உனது அன்புத் திறனல், தெய்வத்தாயின் உறவு அவ்வளவு நெருங்கிவரும். அதன்பின், தெய்வசக்தி உன்னை ஊக்கி நடத்துவதுடன் உன் காரியங்களைத்தொடங்கித் தொடர்ந்து சாதிப்பதையும் காண்பாய்; உன் விருத்திகளெல்லாம் அவளிடமிருந்தே வந்தன; உன் ஆற்றல்கள் யாவும் அவளதே; மனமுயிருடலும் அவள் வினைக்காகவே, உணர்ச்சியும், மகிழ்ச்சியுமுள்ள சாதனங்களாகும்; அவை அவள் லீலைக்காகும் உபகரணங்களேயாகும்; தூலவுலகில், அவள் விளக்கத்திற்கேற்ற பாத்திரங்களாகும். இந்த ஐக்கியத்தினும், சார்பினும் இன்பநிலை வேறு இருக்க முடியாது; ஏனெனில், இந்நிலையே, மடமையில் வருந்தியிடர்ப்படும் துன்ப வாழ்வெல்லையைத் தாண்டி, உனது அத்யாத்மஸத்தின் உண்மை, ஆழ்ந்த அமைதி, இன்பப் பெருக்கம் இவற்றிலுய்க்கும்.

இந்த ரூபாந்திரம் செய்யுங்காலத்தில் இன்னும் கவனமாக உன்னை அகந்தைக் கோணல்களின் விகாரமின்றி, வைத்துக் கொள்வது அவசியமாகும். கோரிக்கையும், ஹடமும் புகுந்து, உனது ஆத்ம நிவேதனம், தியாகம் இவற்றின் தூய்மையைக் கெடுக்காதிருக்கட்டும். பணியிலும், பயனிலும் பற்று இருக்கக்கூடாது. நிபந்தனைகள் விதிக்கக் கூடாது; உன்னை யாட்கொள்ளும் சக்தியை, உன் ஆதீனப்படுத்த உரிமை பாராட்டாதே. நான் ஆயுதம், என்னும் கருவம் கூடாது; இடம்பமும், மமதையும் ஆகாது. உன் மூலம் செயல் புரியும் சக்திகளின் மகத்துவத்தை, உன் மனம், உயிர் அல்லது உடற் பகுதிகளெவையும் சொந்த உபயோகத்திற்காகத் திரித்துத் தனி யின்பத்திற்கே பற்றி

உபயோகப்படுத்த விடக்கூடாது. உன் சிரத்தையும், நிஷ்டையும், ஆர்வத்தூய்மையும், பூரணமாக, எல்லாக் கோசங்களையும், ஜீவ அடுக்குக்கள் அனைத்தையும் பற்றிப்பரவுக; பிறகு ஒவ்வொரு துன்ப மூலமும், வக்ரபலமும், உன்னியல்பினின்று மேன்மேலும் வீழ்ந்தொழியும்.

தெய்வத்தாயுடன் முற்றும் ஒன்றுபடுவதே இச்சித்தியின் இறுதி நிலையாம்; அப்போது தனியான வேறு ஜீவன், கருவி, தாஸன், பணியாளி என்னுமல், அவளுடைய சேதன சக்தியின் நித்தியாம்சமான குழந்தையாகவே உன்னை உண்மையி லுணர்வாய். எப்போதும் அவள் உன்னுள் இருப்பாள்; நீ அவளுள் இருப்பாய்; உனது நினைப்பு, காட்சி, செயல், உனது மூச்சும், அசைவுங்கூட அவளதாகி, அவளிடமிருந்தே வருவதை இடைவிடாமல், எளிதாக, இயல்பாய் அனுபவிப்பாய். அவளால் அவளிடமிருந்து, அவள்லீலைக்கே உருவாக்கி முன் வைக்கப்பட்ட ஒரு வியக்தியும் (வடிவு) சக்தியுமாகவே நீ யுன்னை யறிந்து கண்டுணர்வாய்; அவளுடைய சத்தின்-சத்தாய், சித்தின்-சித்தாய், சக்தியின்-சக்தியாய், ஆனந்தத்தின்—ஆனந்தமாய் அவளிடமே எப்போதும் நீ சுகமாயிருப்பாய். இந்நிலை பூரணமாகி, அவளுடைய விஞ்ஞான சக்திகள் உன்னைத் தாராளமாக இயக்க முடியும்போதே கடவுட்பணிகளில் நீ சித்தி பெறுவாய்; ஞானம், சங்கல்பம், கர்மம் இவை உறுதியும், சகஜமும், பிரகாசமும், சரளமும், மாசின்மையும் பெற்று, பரமனிடமிருந்தே பொங்கிவரும் நித்தியனது தெய்வீக இயக்கமாகும்.

6. அன்னையின் அவதாரம்

அன்னையின் நான்கு சக்திகளும், அவளுடைய விசேஷமான மூர்த்தங்களில் நான்காகும்; அவை அவளது திவ்யஸ்வரூபத்தின் அம்சங்களும், வடிவங்களுமாகும். அவற்றின் மூலமே அவள் தனது படைப்பினங்களிற் செயல் புரிகிருள்; தனது சிருஷ்டிகளை அணிசேர்த்து, தன் ஆயிரம் சக்திகளின் காரியங்களை நடத்துகிருள். ஏனெனில், அன்னை ஒருவளே ஆயினும், அவள் நம்முன் பல வடிவங்களுடன் வருகிருள். அவளுடைய சக்திகளும், வியக்திகளும், ஆவிர்ப்பவங்களும், உலகில் அவள் காரியத்தைச் செய்யும் விபூதிகளும் அனந்தம். நாம் "**அன்னை**"யாய் வணங்கும் பொருள், அனைத்துயிரையும் ஆளும் சிற்சக்தியேயாவள்; அவள் ஒருவளேனும், பலதிறப்பட்டவள்; எத்தகைய நுண்மதிக்கும், பரந்து விரிந்த பேரறிவிற்கும், அவள் இயக்கத்தைப் பின்பற்றியறிய முடியாது. அன்னை பரமனின் சித்தும், சக்தியுமாவாள். அவள் தனது சகல சிருஷ்டிக்கும் அதீதமானவள். ஆனுல், திருவுருக்களாலேயே அவள் மாதிரிகள் சிறிதளவு காணவும், உணரவும் நிற்கின்றன; ஏனெனில், அப்போது, குறிப்பாக அளவான குணகர்மங் கொண்ட தேவதை வடிவங்களில், தனது ஜீவராசிகளுக்காகத் தோன்ற அவள் மனமிரங்குகிருள்.

நம்மையும், உலகையுந் தாங்குஞ் சிற்சக்தியுடன் ஐக்கியானுபூதி அடையும்போது, அன்னை மூன்று வகையாய் இருப்பது உனக்குப் புலனுகும்:

பரமேஸ்வரி அல்லது ஆதிபராசக்தியாய், விசுவாதீதமாய், பரமனின் நித்திய அவ்யக்த ரகசியத்துடன் சிருஷ்டியை இணைக்கிருள்.

புவனேஸ்வரி, அல்லது அகில மஹாசக்தியாயிருந்து, இந்த ஜீவராசிகளையெல்லாம் படைத்து, கோடிக்கணக்கான இந்தக் கதிகளையும்,சக்திகளையும் தரித்து, அவற்றுட் புகுந்து தாங்கி நடத்துகிருள்.

ஜீவேஸ்வரியாகி, தனது வாழ்வின் இந்த இரண்டு அகண்ட ஸ்வரூப சக்தியே வடிவாகி அவற்றை, நமதருகே பிரஸன்னமாக்கி, மனிதனுக்கும், தெய்வத்தன்மைக்கும் இடையே நடுவகிக்கிருள்.

ஆதி பராசக்தியன்னை, தானே உலகங்களுக்கெல்லாம் மேலிருந்து, தனது நித்ய சேதனத்தில், பரமேஸ்வரனைத் தரிக்கிருள் ; தனியாக, சர்வசக்தியையும், உரைகடந்த சாநித்யத்தையும் வகிக்கிருள் ; விளக்கவேண்டிய உண்மைகளைத் தன்னுட்கொண்டு, அல்லது வரவேற்று, அவை மறைந்திருந்த ரகசியத்தினின்று தனது அகண்ட சேதன ப்ரகாசத்திலிறக்கித், தனது எல்லாம்வல்ல சக்தியாலும், அகண்டவாழ்விலும், அவற்றிற்கு ஒரு சக்திவடிவீந்து, உலகில் ஓர்உடலும் அளிக்கிருள். நித்தியசச்சிதானந்தனுகப் பரமன், என்றும் அவளுள்விளங்குகிருன்; உலகங்களிலும், அவள்மூலமாகவே, துவைதாத்வைத சைதன்யமான **ஈசுவரசக்தியாயும்,** துவைத தத்வமான **புருஷப்ரகிருதியாக வும்** விளங்குகிருன்; அவளாலேயே அவன் உலகங்களிலும், சேதனபூமிகளிலும், தேவதைகளிலும், அவரது சக்திகளிலும் உருவாகி விளங்குகிருன்; அவளுக்காகவே அறிந்தவுலகங்களிலும், அறியா மற்றவுலகங்களிலும் உள்ளதனைத்துமாக அவன் உருக்கொள்ளுகிருன். பரமனுடன் அவள் புரியும் லீலையே அனைத்தும்; நித்தியனது இரகசியங்களையும், அனந்தனது அற்புதங்களையும் அவள் விளக்குவதே அனைத்துமாம். எல்லாம் அவளே ; ஏனெனில், எல்லாம் தெய்வ சக்தியின் அம்சமும் அங்கமுமேயாம். பரமன் அநுமதித்து, அவள் தீர்மானிப்பதைத் தவிர, இங்கும், எங்கும், எதுவும் இருக்கமுடியாது; பரமன் இயக்கவே கண்டு, தனது சிருஷ்டியானந்தத்தில் வித்தாக்கி, வடிவமைப்பதைத் தவிர வேறென்றும் உருவாக முடியாது.

மஹாசக்தியான உலகன்னை, பரமனிடமிருந்து, தனது பரம சேதனத்தால் ஏற்றவையெல்லாம் செயலாக்கித் தான்படைத்த உலகங்களில் பிரவேசிக்கிருள். அவள்

பிரஸன்னமே, தெய்வஸத்தினுலும், அனைத்தையும் வகிக்குந் தெய்வபலத்தாலும், ஆனந்தத்தாலும் அவற்றை நிரப்பித்தாங்குகிறது; அஃதின்றி அவைவாழமுடியாவாம். நாம் **பிரகிருதி** யென்பது, அவளுடைய மிகமிகப் புறம்பான கர்மாங்கமேயாகும். அன்னை, தனது பலங்கள் செயல்முறைகளின் ஒழுங்கை அணிவகுத்து நடத்துகிருள்; இயற்கையின் செயல்களைத் தூண்டுகிருள் ; காண்பன, நுகர்வன, உயிர்கொண்டு இயங்குவன அனைத்திலும், தோன்றியுந் தோன்ருமலும் அவள் உலாவுகிருள். ஒவ்வோருலகும், மஹாசக்தியின் அகிலாண்ட லீலையில் ஒன்றேயாம். பராசக்தியன்னையின் விஸ்வாத்மா வாகவும், மூர்த்தியாகவுமே அவள் அங்கே யுள்ளாள். அன்னை தனது திவ்விய திருஷ்டியால் கண்டு, அழகும் சக்தியுமான இதயத்திற்கொண்டு ஆனந்தத்தில் ஆக்கியதே ஒவ்வொன்றுமாகும்.

ஆனல், அவளுடைய சிருஷ்டி கோசங்களும், தெய்வசக்தியின் பதபீடங்களும் பலவாம். நாம் பங்குகொண்ட இவ்வுலகத் தோற்றத்தின் உச்சியில், அன்னை நித்யசக்தியாக நின்று நிலவும் அனந்த ஸத்து, சித்து, சக்தி, ஆனந்தவுலகங்களிருக்கின்றன. அங்கே யுள்ளனவெல்லாம், உரைகாணு நிறைவிலும், மாரு வொன்றிப்பிலும், வாழ்ந்துலவுகின்றன; ஏனெனில், அவளே அவற்றைத் தனது திருக்கரத்தில் க்ஷேமமாகத் தாங்குகிருள். நமக்கு அதி சமீபத்தில் **பூரண விஞ்ஞான** சிருட்டி யுலகங்கள் உள்ளன ; அங்கு அன்னையே காரியசித்தியாலும், ஒவ்வொரு முயற்சியிலும் இயல்பான பூரணத்தாலும் விளங்கி, எல்லா மறிந்த தெய்வ **இச்சாசக்தியும்**, எல்லாம் வல்ல **ஞான சக்தியும்** ஆன விஞ்ஞான மஹாசக்தியாய் விளங்குகிருள். அங்கே எல்லாக் காரியங்களும் உண்மையின் படிகளே ; அங்கு எல்லா வுயிர்களும் கடவுட்சோதியின் ஜீவாம்ஸங்களும், சக்திகளும், உடல்களுமாம். அங்கே, அநுபவங்களெல்லாம் ஒரு தீவிரப் பரிபூரணுனந்தத்தின் கடல்களும், வெள்ளங்களும், அலைகளுமேயாம்.

ஆனால், நாம் வசிக்கும் இங்கே **அவித்தை யுலகங்கள்** உள்ளன. அவை தங்கள் மூலத்தினின்று உணர்வில் வேறுபட்ட மனம், உயிர், உடலுலகங்களே; இவ்வுலகமே அவற்றின் சிறப்பான நடுவாகும். இதன் பரிணாமம் மிகக் கடினமானது. தாமதமும், தடுமாற்றமும், குறைகளும் இருப்பினும், இதையும் உலகன்னையே தாங்குகிறாள்; இதுவும் அதன் இரகசிய நோக்கத்திற்கு மஹாசக்தியாலே தூண்டி நடத்தப்படுகிறது.

விஞ்ஞானஜோதி, சத்தியஜீவனம், சத்தியசிருஷ்டி இவற்றை இங்கே கொண்டுவரவேண்டி யிருக்கிறது. ஏறி இறங்கும் இச் சேதனபூமிகளின் சோபானம், இரட்டை ஏணி போல, ஜடத்தின் அவித்தையில் இறங்கி, உயிர்-உள்ள-மன மலர்ச்சியால், பரமாத்மாவின் அகண்டத்வத்தை நோக்கி மேலோங்குகிறது. இவற்றிற் கிடை நிலையிலே, மனம்-உயிர்-ஜடமாகிய இம்மூன்று அஞ்ஞான வுலகங்களின் மஹா சக்தியாக அன்னை நிற்கிறாள்.

தனது காட்சியாலும், உணர்வாலும், அருட்பொழிவாலும், இந்த அகிலத்திலும், உலக விகாசத்திலும் இருக்க வேண்டுவதனைத்தையும் தீர்மானித்து, அவள் தேவதைகளுக்கு மேலாக நிற்கிறாள்; தனது சக்தி வ்யக்திகளனைத்தும், அவள் காரியத்திற்காக முன்னவைக்கப்பட்டுள்ளன; அவற்றின் கதிர்களை, அன்னை இக்கீழுலகங்களுக்கு அனுப்பி, இவற்றைக் கைப்பற்றி ஆண்டு, பொருதி, வென்று, அவற்றின்யுகசக்கிரங்களைத் திருப்பித், தொகுத்துந் தனித்துமுள்ள அவற்றின் பலங்களின் போக்கை நிர்வகிக்கச் செய்கிறாள். இப்படி அனுப்பப்பெற்ற கதிர்களே, பல காலங்களாக மனிதர் வெவ்வேறு பெயர்களுடன் அவளை வழிபட்டு வரும் தெய்வ ரூபங்களும் மூர்த்திகளுமாம். அத்துடன் ஈசுவர விபூதிகளுக்கு, அவள் மனமுடல்களைப் படைப்பது போலவே, தனது திறமை, தன்மை, சந்நிதியின் சில கதிரைப் பூதவுலகில், நரசேதன வேடத்தில் விளக்க இந்தச் சக்திகள் மூலமும், அவற்றின் கிரணங்கள் மூலமும், தனது

விபூதிகளின் மனமுடல்களையும் உருவாக்குகிருள் ; உலக லீலையின் காட்சிகளெல்லாம் ஒரு நாடகம் போலவே யிருந்து வருகின்றன. அதை அவளே, புவித்தேவர்களைப் பாத்திரர்களாகக் கொண்டு, தானும் குப்த நடியாக நின்று, ஜோடித்து அரங்கேற்றுகிருள்.

அன்னை, அனைத்தையும் மேலிருந்து ஆளுவது மட்டுமின்றி, இத்த முப்பான்மையான கீழுலகிலும் அவதரிக்கிருள். அருவாக, இங்குள்ள எல்லாம், அவித்தையின் ஆட்டங்கள்கூட, அவ்யக்த சக்தியான அவளே, அவளது சுருக்கமான சிருஷ்டியே, அவளுடைய இயற்கையுடலும், இயற்சக்தியுமேயாம் ; கூடமான பரமாணையால் இயங்கி, அனந்த காலத்தில் முடியக்கூடிய ஒரு காரியத்தை நிறைவேற்றவே, அவள் இப்பெரிய வேள்விக் கிணங்கி, அவித்தையுள்ளமும், உருவங்களுமான வேடம் போட்டுக்கொண்டிருக்கிருள். ஆனுல்,ஒளிமிசை நடத்த இருளிலும்,உண்மையாக மாற்றப் பொய்யிலும், பிழையிலும், திவ்ய ஜீவனமாக்கச் சாவிலும், உருமாற்றும் தனது பரமானந்தப் பரவசத்தால் வலிய துயர், இடர்களை யொழிப்பதற்கும், அவள் தானுகவே,இந்த வுலகத் துயரில் அவதரிக்கத் தயைவைத்தாள். தன் குழந்தைகளிடங் கொண்ட ஆழ்ந்த பேரன்பினுலேயே தமஸின் உடை பூணவும் இசைந்திருக்கிருள் ; இருள்-பொய்-வன்மைகளின் பலமான வேதனைகளையும் நிந்தனைகளையும் பொறுக்கக் கருணை பூண்டுள்ளாள் ; சாவாகிய பிறப்பின் வாயில்களிலும் நுழையச் சகித்துள்ளாள் ; உலகின் இன்னல் இடும்பை யிடர்களைத் தன்மீது சுமத்திக்கொண்டுள்ளாள் ; ஏனெனில் இவ்வகையாகவே உலகை, ஒளி, இன்பம், உண்மை, அமரவாழ்வு இவற்றிற்கு உயர்த்த முடியுமென்று அவளுக்குத் தோன்றியுள்ளது. இதுவே மஹாயக்ஞம் ; இது புருஷயக்ஞம் என்று கூறப்படுகிறது ; ஆழ்ந்து நோக்கினுல், இது பிரகிருதியின் மஹாத்யாகமும் தெய்வத்தாயின் ஆத்ம யக்ஞமும் ஆகும்.

7. நான்கு சக்தி வடிவங்கள்

அன்னையின் நான்கு மஹா ரூபங்கள் (அவளுடைய சக்தி வ்யக்திகளில் முதன்மையான நான்கு) இவ் வகிலத்தை நடத்தவும், உலக லீலையை வகிக்கவும் முன் னின்றுள்ளன. அவளுடைய வடிவுகளில் ஒன்று, சாந்த விரிவும், நிறைந்த அறிவும், தெளிந்த அருளும், வற்ருக் கருணையும், கோப்பெரு மாண்பும், அனைத்தையும் ஆளும் மகிமையுங் கொண்டது. மற்ருென்று அவளுடைய அற்புத பல பராக்ரமும், எதிர்க்க முடியாத ராஜஸமும், வீரா வேசமும், பிரசண்ட வேகமும், உலகதிர் திறனும் உருவாக விளங்குவது. மூன்ருவது, தெளிவுங், கனிவும் பொருந்திய அற்புதவடிவு ; அது அன்னையின் அழகு, அமைவு, இனிய ஸமகதி, அதிவிசித்திர சூக்ஷ்ம சம்பத்து, தடுக்க முடியாத கவர்ச்சி, மோகன ஸௌந்தரியம் இவற்றுடன் பொலிவது. நான்காவது, ஆழ்ந்து, நிறைந்த நுண்ணறிவுத்திறனும், கவனமான மாசற்ற செய்கையும், அனைத்திலும் அமைதி யும், சரியான நிறைவும் கொண்டு விளங்குவது ; **அறிவு, ஆற்றல், அமைவு, நிறைவு** இவையே அம்மூர்த்திகளின் சிறப்பான தன்மைகள். இவற்றையே அவர்கள் தம்முடன் உலகிற்குக் கொண்டுவந்து, தங்கள் விபூதிகளில், மனித வுருவில் விளக்குகின்றனர் ; அன்னையின் நேரான ஜீவ னுள்ள பிரபாவத்திற்குத் தமது உலகியல்பை மலர்த்து வோரின் தெய்வ உன்னதியின் அளவிற் கேற்பவே, இவற்றை நிலைநாட்டுகின்றனர். நாம் இவை நான்கிற்கும், **மஹேஸ்வரி, மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹாசரஸ்வதி,** யென்ற நான்கு மஹா நாமங்களைச் சூட்டுகிருேம்.

8. மஹேஸ்வரி

இராஜராஜேஸ்வரியான மஹேஸ்வரி, தர்க்க புத்திக்கும் இச்சாசக்திக்கும் மேலுள்ள விரிவில் அமர்ந்து, அவற்றை ஞானமாகவும், விசாலமாகவும், புடம் வைத்துப் பெருமைப்படுத்துகிருள்; அல்லது, ஒரு பரஞ்சோதியால் பிரவாகிக்கிருள். ஏனெனில், அனந்தங்களுக்கும், ஜகத் விசாலத்திற்கும், பரஞ்சோதி மகிமைக்கும், அற்புத ஞான நிதிச்சாலேக்கும், அன்னேயுடைய நித்திய சக்திகளின் அளவிறந்த இயக்கத்திற்கும் நம்மறிவைத் திறக்கும் மகத்தான ஞானப்பொருள் அவளே. அவள் என்றும், தெளிவும், விசித்திரமும், மாண்பும், அமைதியுந் துலங்குகிருள். அறிவிற்கெல்லாம் அவளே உறைவிடமாதலின், அவளே எதுவும் அசைக்க முடியாது. அவள் அறிய விரும்பும் எதுவும் அவள் கண்ணுக்குத் தப்பாது. பொருள்கள், உயிர்கள், அவற்றியல்பு, அவற்றை இயக்கும் வஸ்து, உலக தர்மம், அதன் காலங்கள் எல்லாம் எப்படி யிருந்தன, இருக்கின்றன, இருக்கவேண்டும் என்பதனேத்தையும் அவள் அறிகிருள். அனேத்தையும் சமாளித்து ஆளும் ஒரு வல்லமை அவளிடம் உள்ளது. அவளுடைய சூக்ஷ்மவிசாலஞானத்தையும், பேரமைதித் திறனேயும், முடிவில் யாரும் வெல்ல முடியாது. அவள், சமதையும், பொறுமையும் மாரு வுறுதியும்பூண்டு, மனிதரை அவ்வியல்பிற்கேற்ப நடத்துகிருள்; அவற்றின் திறனுக்கும், அவற்றிடை விளங்கும் உண்மைக்கும் ஏற்றபடியே, பொருள்களேயும், சந்தர்ப்பங்களேயும் கையாளுகிருள். அவளிடம், ஓரகமென்பது ஒரு சிறிதுமில்லே; ஆனுல், பரமனுணேப்படியே, சிலரை அவள் உயர்த்திச் சிலரைத் தாழ்த்துகிருள், அல்லது தன்னிடமிருந்து விலக்கி இருளி லுய்க்கிருள். ஞானிகளுக்கு இன்னும் விரிந்தொளிரும் ஞானத்தை அருளுகிருள்; நற்காட்சி

யாளரைத் தன் மந்திராலோசனைகளில் அங்கீகரிக்கிருள். பகைவர்மீது அவர்களுடைய பகைப் பயனையே விதிக்கிருள் ; மடையரையும், மூடரையும் அவர்களுடைய குருட்டுத் தனத்திற்கேற்றபடி நடத்துகிருள். அவள், ஒவ்வொருவருள்ளும் பதிலளித்து, அவர் இயல்பின் கூறுபாடுகளை அவற்றின் தேவை, அவசரம், பிரதிபலன் இவற்றிற்கேற்றபடியே கையாளுகிருள் ; அவற்றைத் தேவையளவு நெருக்குகிருள் ; அல்லது அவர்கள் அபிமானிக்கும் சுயேச்சைக் கேற்ப, அஞ்ஞான வழியில் செழிக்கவோ அழியவோ விட்டுவிடுகிருள். ஏனெனில், அவள் அனைத்திற்கும் மேலிருப்பவள். எதிலும் கட்டற்றவள் ; உலகில் எதிலும் பற்றற்றவள். எனினும், மற்றெவரினும் அவளே ஜகன்மாதாவின் இதயமுள்ளவள். அவளுடைய இரக்கம் எல்லையற்றது, வற்ருதது. அவள் விழிகளுக்கு, அசுரர், அரக்கர், பிசாசர் எதிர்த்துப் பகைசெய்வோர் உட்பட அனைவரும் ஏகவஸ்துவின் அம்சங்களான குழந்தைகளே. அவள் விலக்கிவைப்பதும் விலம்பனமே ; தண்டிப்பதும் அநுக்கிரகமே. ஆனுல், இரக்கம் அவளுடைய அறிவை மறைப்பதில்லை; அல்லது விதித்த வழியினின்றும் அவள் செயலைத் திருப்புவதில்லை ; ஏனெனில், பொருள்களின் உண்மையே அவளுடைய குறிப்பு ; ஞானமேஅவள் சக்தியின் கேந்திரம். நமது ஜீவனையும், இயல்பையுங் கடவுளுண்மையி லமைப்பதே அவளுடைய காரியமும், முயற்சியுமாம்.

9. மஹாகாளி

மஹாகாளி மற்றோரியல்பினள். விசாலமில்லை, ஞான மன்று; ஆற்றலும்-பலமும்—இதுவே அவளுடைய விசேஷ சக்தி. அமிதமான தீவிரம், சங்கல்ப சித்திக்குப் பிரசண்டவேகம், தட்டுத்தடைகளைத் தகர்த்தெறியத் தாவும் ஒரு திவ்ய பலாத்காரம்—இவை அவளிடந் துலங்கும். அவளுடைய தெய்வத்வமனைத்தும் ஒரு ரௌத்ர கர்மோஜ்வலனமாகப் பாய்கிறது; வேகம் கைமேற் பலிக்குங் காரியம், பளிச்சென்று நேர்ப்போடு, அனைத்தையும் வெல்லும் நெற்றித்தாக்கு இவற்றிற்கே அவள் விளங்குகிறாள். அவள் முகம் அசுரனுக்குப் பயங்கரமாயிருக்கும்; தெய்வ விரோதிகளுக்கு அவள் சீற்றம் அபாயமானது; இரக்கமற்றது; ஏனெனில், அவள் சண்டைக்குப் பின்வாங்காத ரணசண்டி. அவள் அபக்குவத்தைத் தாங்குவதில்லை; மனிதனிடமுள்ள பிகுவையெல்லாம் முரட்டுத்தனமாகத் தாக்குகிறாள்; பிடிவாத மடமை, தமஸ் அனைத்திற்கும் அவள் கடுமையாயிருக்கிறாள்; மோசம், பொய், குரோதம், பகை இவற்றை உடனே கடிந்து சவுக்கடி கொடுக்கிறாள்! கடவுட்பணியில் அசட்டை, அலட்சியம், சோம்பல் இவற்றை அவள் பொறுக்க முடியாது; அகாலத்தில் தூங்குகிறவனையும், சும்மா திரிகிறவனையும் அவசியமானால், சுறீரென்று படும்படி அடித்தெழுப்புகிறாள், சுறுசுறுப்பு, நேர்மை, வெளிப்படையான வேகங்கள், கரவின்றி நிறைவான இயக்கங்கள். கனலேறும் ஆர்வம், இவற்றில் மஹாகாளி சஞ்சரிப்பாள். அவளது ஆவேசம் அடக்கமுடியாதது; அவளுடைய காட்சியும், இச்சையும், பருந்து பறப்பதைப்போல, வெகு உயரத்திற்கும் தூரத்திற்கும் எட்டும். அவள் பாதங்கள் மேல்நோக்கிக் கதித்தெழுகின்றன! அவள் திருக்கரங்கள், தாக்கவும், காக்கவும் நீட்டப்பெற்றுள்ளன. ஏனெனில்,

அவளும் அன்னையே ; அவள் அன்பும், ஆத்திரத்தைப் போலவே தீவிரமானது ; அவள் ஆழ்ந்த ஆவலுள்ள பட்சமுடையாள். தனது திறமையுடன் அவள் பிரவேசிக்க இடங்கொடுத்தால், பிறகு அழுத்தமான இடையூறுகளுடன், சாதகனைத் தாக்கும் விரோதிகளும் திடமற்ற பொருள் களைப் போலத் தவிடுபொடியாவர். அவள் சீற்றம் பகைவருக்குப் பயங்கரமாயினும், அவளுடைய சண்ட வேகம் திடமற்ற கோழைகளுக்குத் துன்பமாயினும், மஹான்கள், பலவான்கள், மேலோர்களால் அவள் நேசித்துப் பூசிக்கப்படுகிருள் ; ஏனெனில், அவளுடைய உதைகள், தங்களியல்பிலுள்ள எதிர்ப்புக்களைப் புடைத்து, ஆற்றலும், உண்மையுமாக்குகின்றன. வக்ர விபரீதங்களை நேராகத் தீட்டுகிருள் ; அழுக்கையும் இழுக்கையும் வெளி முடுக்குகிருள் என்பதைப் பெரியார் உணருகின்றனர். அவளில்லாவிடில், ஒரு நாளில் முடிவது நூற்றுண்டுகள் செல்லும் ; அவளின்றி, ஆனந்தம், விசாலமாகவும், கம்பீரமாகவும் அல்லது மென்மை, இனிமை, அழகுடனும் விளங்கலாம் ; ஆனால், அதன் முழுத்தீவிரங்களின் கனலும் இன்பத்தை இழந்துவிடும். அவள் அறிவிற்கு ஒரு வெற்றித் திறனை யளிக்கிருள் ; அழகிற்கும் அணிக்கும் உயர்ந் தோங்கி வளரும் கதியைத் தருகிருள். சித்திக்காக மந்த மும் கடினமுமான உழைப்பிற்குச் சக்தியைப் பெருக்கி, நீள் வழியைச் சுருக்கும் ஒரு உத்வேகந் தருகிருள். பரமானந் தம், அதி மஹோன்னதம் மகத்தான லக்ஷியங்கள் அதி விசால திருஷ்டி இவற்றிற்குக் குறைந்த தெதுவும் அவளை மகிழ்விக்காது. ஆதலால், அவளிடமே கடவுளின் **ஜயசக்தி** யுள்ளது. அவளது கனல், உக்கிரம், வேகம் இவற்றின் அருளாலேதான் அந்தப் பெரிய சித்தி இனியினும், இப்போதே வாய்க்கும்.

10. மஹாலக்ஷ்மி

ஞானமும், சக்தியுமே பரம மாதாவின் விளக்சங்களல்ல ; அவளியல்பில் இன்னும் சூக்ஷ்ம ரகசியம் ஒன்றுள்ளது ; அஃதின்றி ஞானமும்,சக்தியும் அபூர்ணமாயிருக்கும். பூரணம் பரிபூரணமாயிராது. அவற்றிற்கு மேல், நித்ய சௌந்தர்யத்தின் அதிசயமும், தெரிதற்கரிய தெய்வ சமன்வயங்களின் இரகஸ்யமும், நம்மைக் கவரும் ஜகந்மோகனத்தின் வலிய இந்திரஜாலமும், வசீகரணமும் துலங்குகின்றன ; இவையே, வஸ்துக்களையும், சக்திகளையும், ஜீவர்களையும், திரை மறைவினின்று ஓர் அவ்யக்த ஆனந்தம் ஆடல்புரிந்து, அவற்றை அதன் பண்களும், உருக்களும் ஆக்கும்படி இணைத்துப் பிடித்துக் கூடிப் பொருந்தச் செய்கின்றன ; இதுவே மஹா லக்ஷ்மியின் வல்லமை. தேகாத்மாக்களின் இதயத்திற்கு, இவளினும் வசீகரமான தெய்வ சக்தி வடிவம் வேறில்லை. மஹேஸ்வரி, மண்ணியல்பின் சிறுமை, சிறிதும் அணுகவுந், தாங்கவும் முடியாத அவ்வளவு அமைதியும், மகிமையும், தொலைவும், உள்ளவளாகக் காணக்கூடும் ; மஹா காளியோ, உலகியல்பின் துர்ப்பலம் தாங்க முடியாதபடி அவ்வளவு வேகமாகவும்,உக்கிரமாகவும்இருக்கக்கூடும். ஆனால், அனைவரும் மகிழ்ந்து, விரும்பி, **மஹாலக்ஷ்மியையே** நோக்குகின்றனர்.

ஏனெனில், அவள் கடவுளின் உன்மத மதுரமோகன ஜாலத்தை வீசுகிறாள் ; அவளருகிலிருப்பதே பரமானந்தமாகும் ! அவளை உள்ளேயுணர்வது வாழ்வைப் பரவசமும், ஆச்சரிய மயமும் ஆக்குவதாகும் ; லாவண்யமும், ரமணீயமும், கோமளமும், சூரியனிடமிருந்து ஒளிவருவதுபோல் அவளிடமிருந்து ஓடிவரும். மேலும், அவள் தனது அற்புத நோக்கை நாட்டுமிடமெல்லாம், புன்னகை யினிமையைப் பொழியுமிட மெல்லாம் ஜீவன் பிடிபட்டு, அவளுக்கே

ஆட்பட்டு, அண்டமுடியாத ஆனந்தத்தின் ஆழங்களில் ஆழ்த் தப்படுகிறது. அவள் கரங்களின் ஸ்பரிசம் காந்தம்போன்றது. அவற்றின் குப்த ஸுகுமாரப் பிரபாவம் மனத்தையும், பிராணனையும், சரீரத்தையும் விசுத்தியாக்குகின்றன. அவள் மலரடிகளை நாட்டியவிடம், பரம பரவசானந்தத்தின் அற்புத ஓடைகள் பொங்கி வருகின்றன.

ஆயினும், இந்த மோகனசக்தி வேண்டுவதை நிறை வேற்றுவதும், அவள் சுப்ரஸன்னத்தை வகிப்பதும் எளி தல்ல. அந்தராத்மாவிலும் மனத்திலும் அழகணி; நினைப்பு, உணர்வுகளில் அழகணி; ஒவ்வொரு புறச் செயலிலும், நடையிலும் அழகணி; இதுவே மஹாலக்ஷ்மி வேண்டுவது. குப்த புவனானந்தப் பண்களுடன் எங்கே பற்றுதல் உள்ளதோ, சர்வஸௌந்தர்யத்தின் அழைப் பிற்கு எங்கே பதில் உள்ளதோ, ஆண்டவன்பால் திரும்பிய பல ஜீவர்களின் பொருத்தமும், சேர்க்கையும், இன்ப வோட்டமும் எங்குள்ளதோ, அத்தூய சுற்றத்திலேயே அவள் இருக்கச் சம்மதிப்பாள். அவலட்சணம், சிறுமை, அற்பத்தனம், தரித்திரத்தனம், வறட்சி, அசுசி, முரட்டுத் தனம் ஆனவையெல்லாம் அவள் வரவைத் தடுக்கின்றன; அன்பும், அழகும் இல்லாத இடம், அல்லது அவை உண்டாக விருப்பமில்லாத இடம் அவள் வருவதில்லை; அவை இழி பொருள்களுடன் கலந்து குலைந்திருப்பின், அவள் விரைவில் முகத்தைத் திருப்பிச் செல்லுகிறாள்; அல்லது தனது ஸௌபாக்கியங்களைப் பொழியக் கருதுவதில்லை. சுயநலம், பகை, பொறாமை, அசூயை, குரோதம், கலகம் இவை மனித இதயத்தைச் சூழ்ந்திருக்கக் கண்டால், மோசம், துராசை, நன்றியின்மை இவை ஸத்பாத்திரத்துடன் கலந்திருக்கக் கண்டால், முரட்டு வெறியும், அசுத்த ஆசையும் பக்தியை யிழிவுறுத்தினால், அத்தகைய இதயங்களில், அருளும், அழகும் பொலியும் தேவி குடியிருக்கமாட்டாள். ஒரு தெய்வீக வெறுப்புக்கொண்டு அவள் விலகுகின்றாள்; ஏனெனில், அவள் வற்புறுத்திப் பிரயாசப் படுபவள்

அல்லள்; அல்லது இக்கசப்பான நச்சுப்பேய்ச்சரக்கு விலகி யொழியுமட்டுந் தன் முகத்தை, மறைத்துக் காத்திருந்து, பின்பே புதிதாகத் தன் இன்பவுறவை நாட்டுவாள். சந்யாஸ வறட்சியும், கடுமையும் அவளுக்குப் பிடிப்பதில்லை; ஆழ்ந்த இதயாவேகங்களை அடக்குவதும், அந்தராத்மா அல்லது ஜீவனின் ஸௌந்தர்யாம்சங்களைக் கொடுமையாக நிரோதிப்பதும் அவளுக்குப் பிடிப்பதில்லை. ஏனெனில், அன்பு, அழகின் மூலமே அவள் மனிதரைத் தெய்வாதீன மாக்குகிருள்; அவளுடைய மகத்தான படைப்புக்களில், திவ்யக் கலையின் செல்வச் சிறப்பாக ஜீவன் மாறுகிறது; வாழ்வெல்லாம், திவ்யானந்தக் கவியாக ரசிக்கப்படுகிறது. உலகின் செல்வங்கள், ஓர் உயர்ந்த ஸ்தாபனத்திற்காகக் கொணர்ந்து, ஒன்று சேர்க்கப்படுகின்றன; மிகவும் எளிய, சாதாரண வஸ்துக்களும், அவளுடைய ஐக்கிய ஞான திருஷ்டியாலும், ஆத்ம ஸ்பரிசத்தாலும், அசாதாரணமாக விளங்குகின்றன. இதயத்தில் அவளை ஏற்ருல், ஞானத்தை அற்புதச் சிகரங்களுக்கேற்றி, அனைத்தறிவையுங் கடந்த ஆனந்த பரவசத்தின் குப்த ரகசியங்களை அதற்கு விளக்கு கிருள்; அவள் பரம தெய்வாகர்ஷணத்துடன் பக்தியைக் கூட்டுகிருள்; பலத்திற்கும், சக்திக்கும் அவற்றின் செயல்-திறமை, அணியும் அளவும் பொருந்தி நிற்கும் பண்ணமை தியைக் கற்பிக்கிருள். சித்தியின்மீது, அஃது என்றும் நிலை நிற்கச் செய்யும் மோஹனத்தை வீசுகிருள்.

11. மஹாசரஸ்வதி

மஹா ஸரஸ்வதி, அன்னையின் கர்ம சக்தியும், பூரணம், ஒழுங்கு இவற்றின் தன்மையுமாவாள். நால்வரின் இளையவளான அவள், நிர்வாக சக்தியில் மிகத்திறமை யுள்ளவள்; தூலவியல்பிற்கு மிகச் சமீபமாயிருப்பவள். மஹேஸ்வரி உலக சக்திகளின் விசால மார்க்கங்களை யமைக் கிருள்; மஹாகாளி, அவற்றின் ஆற்றலையும், வேகத்தை யுந் தூண்டிச் செலுத்துகிருள்; மஹாலக்ஷ்மி அவற்றின் சந்தங்களையும், அளவுகளையும் கண்டுபிடிக்கிருள்; மஹா சரஸ்வதியோ அவற்றின் முறைவகுப்பு, நிர்வாக நுட்பம், அங்கங்களின் சம்பந்தம், சக்திகளின் திறமையான பொருத் தம், பலம், நிறைவேற்றம் இவற்றின் தவருத சரிமுறை இவற்றிற்குத் தலைமை வகிக்கிருள். எல்லா வித்தையும், கலையும், கௌஸல்யமும் மஹா ஸரஸ்வதியின் மண்டல மாகும். ஆழ்ந்த தெள்ளறிவு, கூர்மை, பொறுமை, அந்தர்ஞான மனத்தெளிவு, தேர்ந்த தொழிலாளியின் கைநிதானம், விழிநுட்பம் இவற்றை அவள் தன்னியல்பிற் கொண்டு, தான் விரும்பித் தேர்ந்த அன்பருக்கு அருள முடியும். இந்தச் சக்தியே திறமையாக, சலியாது, கவன மாக, சாமர்த்தியமாக உலகங்களை அமைப்பவள், வகுப் பவள் நிர்மாணி, நிர்வாகி, பிரயோக ஞானவதி, கலாவதி. இயல்பை மாற்றிப் புதிதாயமைக்க மேற்கொள்ளும்போது அவள் வேலை சிரமமானது, நுட்பமானது; தமது ஆத்திரத் திற்கு அது தாமதமாகவும், எளிதில் முடியாதுபோலும், அடிக்கடி தோன்றும்; ஆனுல், அது நிலையாக நிறைவாக மாசுமறுவற்றதாக இருக்கும். எனெனில், காரியங்களில் அவள் சங்கற்பம் சாவதானமானது, உறக்கமற்றது, தளர் வற்றது; நம்மை நுனித்து நோக்கி, அவள் ஒவ்வொரு சிறு நுட்பங்களையும் கண்டு தொட்டுப் பார்க்கிருள். அணுப்

பிசகையும், முறிவையும், நெறிவையும், அல்லது குறையை யும் கண்டுபிடிக்கிருள். செய்தவை, இன்னும் பாக்கி செய்யவேண்டியவை யெல்லாம் அவள் சரியாக நிதானித்து நிறுத்துப் பார்க்கிருள். மிகச் சிறிது, அற்பம் என்று விடாமல், அவள் எதையும் கவனிக்கிருள். மாருது, கரந்து, ஒளிந்திருப்பினும், எதுவும் அவளேத் தப்ப முடியாது. உண்மை வடிவெய்தி ஸமக்ரத்தில் அதற்குரிய இடத்திற் பொருந்தி, அதற்கிசைந்த காரியத்தை நிறை வேற்றுமட்டும், அவள் மீண்டும்மீண்டும் ஒவ்வோர் அங்கத் தையும் உருப்பிடித்துப் பாடுபடுகிருள். நிலேப்பாக, வஸ்துக் களே மீண்டும் மீண்டும் சுறுசுறுப்பாக முறைப்படுத்தும் போது அவள் விழி, உடனே எவை வேண்டுமென்றும், அவற்றை எப்படி யடைவதென்றுங் குறிக்கிறது; கொள்ள வேண்டியது, தள்ளவேண்டியது இன்னதென்பதை அவள் அந்தர்ஞானம் அறிகிறது. சரியான பாத்திரம், சரியான காலம், சரியான நிலேமைகள், சரியான நடைமுறை இவற்றை அவளுடைய அநுபூதிஞானம் வெற்றியுறத் தீர்மானிக்கிறது. அகவனம், அசட்டை, ஆலஸ்யம் இவற்றை அவள் அருவருக்கிருள்; வேலேகளில் அறைகுறை, பதற்றம், சிக்கல், ஆபாசம், கடன்கழித்தல், குறிப்பிசகு, குறிவிட் டலேதல், பொய்ப்புனேப்பு, கரணங்களேயும், திறமைகளேயும் துர்விநியோகித்தல், காரியங்களேச் செய்யாமல் விடுவது, அல்லது அறைகுறையாகச் செய்வது இவை யெல்லாம் அவள் சுபாவத்திற்கு வெறுப்பும், அன்னியமும் ஆனவை. அவள் வேலே முடிந்தவுடன், எதுவும் மறக்கப்பட்டிராது; எவ்வுறுப்பும் இடந்தவறி வைக்கப்பட்டு, விலக்கப்பட்டு அல்லது தவருன நிலேயில் விடப்பட்டிராது; எல்லாம் அழுத்தந்திருத்தம், பொருத்தம், நிறைவு, அற்புதமாகவே யிருக்கும். பரம பரிபூரணத்திற்குக் குறைந்ததெதுவும் அவளே மகிழ்விக்காது; தனது சிருட்டியின் பூர்த்திக்கு அனந்த காலமும் வேண்டுமெனினும் அவள் பாடுபடத் தயாராயிருக்கிருள். ஆதலின், அன்னேயின் சக்திகள்

அனைத்தினும், மனிதனுடனும், அவனுடைய ஆயிரங்குறைக ளுடனும் அவளே நீண்டகாலம் வருந்துகிருள். நம்மிடம் மனவொருமையும், உறுதியும், நேர்மையும், உண்மையும் இருக்கவேண்டும் ; ஆயின், பிரியமுடன் புன்னகைத்து, அருகில் துணை நின்று எளிதிற் பின்வாங்காமல், அல்லது தளராமல், மீண்டும் மீண்டும் தவறினுலும், பிடிவாதமாக அவள் கரம் படிக்குப்படி நம்மைத் தாங்கிச் செல்லுகிறது ; ஏனெனில், இரண்டுபட்ட மனத்தை அவள் ஒருக்காலும் பொறுக்கமாட்டாள். வேஷம், நடிப்பு, செருக்கு, பாசாங்கு இவற்றின் குட்டை அவள் இரக்கமின்றி, விநோதமாக வெளியேற்றி விடுவாள். நமது தேவைகளையளிப்பதில் அவள் அன்னை ; நமது இடர்களில் நண்பன் ; உறுதியுந் தெளிவுமுள்ள மந்திரியும், ஆலோசனை சொல்வோனு மாகிப் பொலியும் புன்னகையால் கவலை, மனக் கசப்பு, தளர்வாகிய மேகங்களைத் துரத்தியடித்து, நித்திய ஸாநித்ய மான தனது துணையை அவள் எப்போதும் நினைப்புறுத்தி, நித்தியக் கதிரொளிக்கு வழிகாட்டி, பரப்பிரகிருதியின் பரிபூரணத்தை நோக்கி, ஆழ்ந்து, தொடர்ந்து, ஊக்கித் தூண்டி நடத்த அவள் உறுதியும், அமைதியும், விடா முயற்சியும் கொண்டு விளங்குகிருள். மற்றச் சக்திகளின் காரியசித்தி அவளையே சார்ந்திருக்கிறது ; ஏனெனில், அவளே ஸ்தூலாதாரத்தை யுறுதியாக்கி, ஒவ்வொரு நுட் பத்தையும் அங்கத்தையும் உழைத்து நேர்த்தியாகி, நிர்மித்துக் கட்டிடத்தின் சன்னகத்தைப் பொருத்தி அமைக்கிருள்.

12. ஆநந்த சக்தி

தெய்வத் தாயின் மகத்தான வடிவங்கள் வேறுள்ளன ; ஆனுல், அவற்றைக் கீழேகொணர்வது மிகக் கடின மாயிருந்தது ; மேலும், உலகான்மப் பரிணுமத்தில், அவை அவ்வளவு முதன்மையாக முன்னிற்கவில்லை. அவற்றுள், விஞ்ஞான சித்திக்கு இன்றியமையாத ஸாநித்தியங்களும் உள்ளன—அவை அனைத்தினும் அன்னையின் பரமதிவ்யப் பிரேமையினின்றும் ஓடிவரும் இரகசியமான, தீவிரப் பரவசங்கொண்ட, ஆனந்த விக்கிரகம் ஒன்றுள்ளது. விஞ்ஞான சைதன்யத்தின் பரமோன்னத சிகரத்திற்கும், ஜடப்பிரகிருதியின் அதப்பாதாளத்திற்கும் இடையே உள்ள அகாதத்தை அந்த ஆனந்தமே சமன் செய்யமுடியும். ஒரு பரமாற்புத தெய்வ ஜீவனத்தின் திறவுகோலை வைத்துக் கொண்டு, இப்போதும் அந்த ஆனந்தமே தனது இரகசிய நிலைகளினின்றும் மற்ற விசுவ சக்திகளின் காரியத்தைத் தாங்கி நிற்கிறது. ஆனுல், பந்தமும், அகந்தையும், தமோ விருத்தியுங் கொண்ட மனிதவியல்பு, இம் மகத்தான ஸாநித்தியங்களை ஏற்பதற்காவது, அவற்றின் அபாரச் செயலைத் தாங்குவதற்காவது வல்லதாயில்லை. இந்த நான்கு மஹாசக்திகளும், ரூபாந்தரமான மனமுயிருடலில் தங்கள் சமதாளத்தையும், சுதந்திர கதியையும், நாட்டிய பிறகே, மற்ற அதி அபூர்வ சக்திகள் உலக வியக்கத்தில் விளங்கி, விஞ்ஞான கர்மம் கைகூடும். ஏனெனில், தெய் வத்தாயின் மூர்த்திகளெல்லாம் ஒருங்கே தன்னுட்கூடி விளங்கும்போதும், அவற்றின் தனித்தனிச் செயல் ஒரு சமரஸ ஐக்கியமாகும்போதும், அவை தன்மூலம் தமக்குரிய விஞ்ஞான் தேவதாம்சங்களுக்கு உயரும்போதுமே, அன்னை **விஞ்ஞான மஹா சக்தியாய்** விளங்கி, தனது ஜோதிர்மயமான பரமாத்ம சக்திகளை, அவற்றின் தூரியாகாச நிலையில்

நின்றும் சரமாரியாகக்கொண்டு பொழிகிருள். அப்போதே மனிதவியல்பு சக்திவாய்ந்த தெய்வவியல்பாகும்; ஏனெனில், அப்போதே விஞ்ஞானசக்தி சேதனம், சத்யசக்தி, இவற்றின் மூலத் தந்திகளெல்லாம் ஸம்மேளனப்பட்டு, ஜீவவீணை நித்திய பரமாத்மாவின் ஆனந்த கானங்களைச் செய்ய, சுருதி கூட்டப்படுகிறது.

13. ரூபாந்தரம்

இந்த ரூபாந்தரத்தை நீ விரும்பினால், எவ்விதமான வீண்வாதமும், எதிர்ப்புமின்றி, அன்னை கையிலும் அவள் சக்திகளிடமும் உன்னை ஒப்பித்துவிடு; அவள் தனது காரியத்தை உன்னுள தடையின்றிச் செய்யட்டும். உன்னிடம் மூன்று தன்மைகள் அமைந்திருக்கவேண்டும்:—உணர்வு, இணக்கம், சரளமான அடைக்கலம். ஏனெனில், உன் மனம், ஜீவன், இதயம், பிராணன் அனைத்திலும் உனது உடலின் கண்ணறைகளிலும் கூட, அன்னையையும், அவள் சக்திகளையும், அவற்றின் செயலையும் நீ உணரவேண்டும்; நீ யறியாமலும், நீ உணராத பாகங்களிலும், நேரங்களிலும், அவள் தனது காரியத்தைச் செய்ய முடியும்; அப்படியே செய்கிறாள்; எனினும் அது, உள் விழித்து, அவளுடன் நீ ஜீவனுள்ள சம்பந்தம் கொண்டபோது செய்யப் படும் காரியத்திற்குச் சமானமாகாது. உன்னியல்பனைத்தும் அவள் கைக்கு இணக்கமாயிருக்கவேண்டும்—அகம்பாவங் கொண்ட மூடமனம் சம்சயித்து, சந்தேகித்து, வாதாடித் தானே தனது ஞானோதயத்திற்கும், மாறுதலுக்கும் பகையாவதுபோல, நீயும் சம்சயிக்காதே; மனிதப்பிராணன் தனது சொந்த இயக்கங்களிலேயே அழுத்தஞ் செய்து, தனது முரட்டு ஆசைகளும், கெட்ட எண்ணங்களும் தெய்வ பலத்தால் மாறுவதினின்று, பிடிவாதமாக எதிர்ப்பது போல, நீயும் அழுத்தஞ் செய்யாதே; மனிதனது ஸ்தூல சேதனம், அசக்தி, மந்தம், தாமதம் இவற்றிற் புதைந்து தடை செய்து, தன் அற்ப, அஞ்ஞான சுகத்தையே பற்றி, அதன் உயிரற்ற பழக்கம், மந்தச் சோம்பல், அல்லது ஜட வுறக்கத்தைக் கலைக்கும் ஒவ்வொரு பரிசத்தையும் மறு தலிக்கிறது. அது போல நீ மறுத்துத் தடை செய்யாதே. உனது உட்புற வாழ்வின் தாராளமான அடைக்கலமே,

உனதியல்பின் எல்லாப் பாகங்களிலும் இந்த இணக்கத்தைக் கொண்டுவரும், மேலிருந்து பொழிந்தோடிவரும் ஞானம், ஜோதி, சக்தி, அமைவு, அழகு, பூரணம் இவற்றிற்கு உன்னை நீ இடைவிடாமல் மலர்ப்பித்தால், உன்னுள் எங்கும் தெய்வ சேதனம் விழித்தெழும். உடலும் விழித்தெழுந்து, அதன் உணர்வும், முடிவாக விஞ்ஞான சித்சக்தியுடன் தெளிவாகக் கூடி, மேலும் கீழும், சுற்றுமிருந்து, அவளுடைய சக்திகள், பரவி, பரமப் பிரேமையும், பரமானந்தமுங் கூடிய ஒரு சிலிர்ப்பை உணரும்.

ஆனால், உஷாராயிரு! தனக்கெட்டாதபொருள்களையும், தனது விதி நியமங்கள், குறுகிய விதர்ப்பங்கள், தப்பபிப் பிராயங்கள், ஆங்கரிக்கும் அடியற்ற மடமை, அதன் அற்ப அகந்தையறிவு இவற்றிற்குக் கட்டுப்படுத்த விரும்பும் உனது சிறிய மண்ணியல் மனத்தால், தெய்வத் தாயை அறிந்து நிதானிக்க முயலாதே! மங்கலான இருட்சிறையிலடைபட்ட மனிதனின் தர்க்க புத்தி, தெய்வ சக்தியின் பலதிறப்பட்ட, சுயேச்சையான கதிகளை அறிந்துகொள்ள முடியாது. அதி வேகமும், பல பாண்மையுமான அவளுடைய காட்சியும், செயலும் அதன் தடுமாற்ற மதியை மிஞ்சியவை; அவளுடைய சலனகதி மனித மனத்தின் அளவை மிஞ்சியது. அவள் அதிவிரைவில் தனது பலவேறு வடிவங்களை மாற்றுகிறாள்; பண்களைக் கூட்டுகிறாள்; பண்களைக் கலைக்கிறாள்; வேகத்தை ஊக்குகிறாள்; பின்வாங்குகிறாள்; ஒருவர் பிரசினத்தையும், மற்றொருவர் பிரசினத்தையும் வெவ்வேறு வகையாகத் தீர்க்கிறாள்; இப்போது இந்த நெறியைப்பற்றி விட்டுவிடுகிறாள்; பிறகு அந்த நெறியை; பிறகு அவற்றை ஒன்றுசேர்க்கிறாள்; இவற்றின் வேகத்தில் மனிதமனம் திப்பிரமை பிடித்து மயங்குகிறது; அஞ்ஞான சங்குலத்தை ஊடுருவி, ஒரு திவ்ய ஜோதிக்கு வட்டமிட்டு, மேல் வீசியெழுந்து பாயும் பராசக்தியின் வழியை அது அறிந்துகொள்ளாது. உனது

உள்ளத்தை அவளுக்குத்திற; உள்ளியல்பால் அவளையுணர்; உள்விழியால் அவளைக்காண்; அதுவே உண்மைக்கு நேரான உத்தரமளிக்கும். பிறகு அன்னையே உனது மனம், இதயம், உயிர், உடல் உணர்வு அனைத்தையும் அவற்றிற்குரிய அத்யாத்ம அம்சங்களால் ஒளியுறுத்தித் தனதுவழிகளையும், இயல்பையும் அவற்றிற்கும் விளக்குவாள்.

முற்றறிவு, சர்வ வல்லமை இவற்றைக் குறித்து நமது மூடமதிக்குப் பண்படாத, ஆழமற்ற கொள்கைகள் உள்ளன; அவற்றின்படியே நடக்கவேண்டுமென்று தெய்வ சக்தியைக் கேட்குங் குற்றத்தையும் விட்டுவிடு. ஏனெனில், நமது மனம் அதிசயச் சக்தியும் எளிதான வெற்றியும், கண் கூசும் ஜோதிகளுங்காட்டிப் படிக்குப்படி நம்பிக்கையூட்ட வேண்டுமென்று கதறுகிறது. இன்றேல், இங்கே தெய்வ மிருப்பதை அது நம்பமுடிவதில்லை. மடமையை மடமைக் களனிலேயே அன்னை பொருதிவருகிறுள்; அவள் அங்கே இறங்கியிருக்கிறுள்; மேலேறவேயில்லை. தனதறிவையும், திறனையும், ஒரு பங்கு விளக்கித், தன் கருவிகளிடமிருந்தும், மூர்த்திகளிட மிருந்தும் அவற்றை அடிக்கடி அடக்கிக் கொண்டு, ரூபாந்திரமாக்க, தேடும்மனம், விரும்புஞ் சித்தம், பொருதும் பிராணன், சிறைப்பட்டு வருந்துந் தூல வியல்பு இவற்றின் வழியைப் பின்பற்றுகிறுள். ஈசுவர இச்சையால் இடப்பட்ட திட்டங்கள் உள்ளன; அவிழ்க்க வேண்டிய சிக்கலான முடிச்சுக்கள்பலவுள்ளன; அவற்றைத் திடீரென்று நறுக்கமுடியாது. பரிணமப் படியேறும் இவ்வுல கியல்பை அசுரனும், அரக்கனும் பற்றிக்கொண்டிருக்கின் றனர்; நீண்டகாலமாக அவர் வென்றுளும் மானியத்திலும், மண்டலத்திலுமே அவர் நிபந்தனைகளை அநுசரித்தே அவர் களை வெல்லவேண்டியிருக்கிறது; நம்மிட மிருக்கும் மனித வியல்பை, அதன் எல்லையைத் தாண்டிக் கடைத்தேற்றி நடத்தவேண்டியிருக்கிறது; திடீரென்று, தனக்கு அதீத மான ஒரு திவ்யஸ்வரூபத்திற்கு உயர்த்த முடியாமல், அது பலவீனமாகவும், இருளாகவும் உள்ளது. தெய்வசேதனமும்,

சக்தியும் தயாராயிருக்கின்றன; அவை ஒவ்வொரு விநாடியும், காரியக்கிரமத்தில் செய்யவேண்டியதைச் செய்கின்றன; எப்போதும் விதிக்கப்பட்ட முறையைப் பின்பற்றி, அபூரணத்திற்கிடையே இனி வரவேண்டிய பூரணத்தை உருவாக்குகின்றன. ஆனால், விஞ்ஞானம் உன்னுள் இறங்கினாலேதான் விஞ்ஞான வியல்புகளுடன், விஞ்ஞான சக்தியாக அவள் நேரே செயல்புரிய முடியும். நீ உன் மனத்தைப் பின்பற்றினால், உன்முன்னே விளங்கும்போதும் அன்னையை நீ அறிந்துகொள்ள மாட்டாய். கண்டதிற் பாயும் விஷய மனத்தைப் பற்றாமல், சத்யாநுகூலமான அந்தராத்மாவையே பின்பற்று; தெய்வசக்தியை நம்பு; அவள் உன்னிடமுள்ள தெய்வத் தன்மைகளை விடுவித்து, அனைத்தையும் திவ்ய ப்ரகிருதி விகாசமாக உருவாக்குவாள்.

உலகுணர்வின் பரிணாமத்தில் விஞ்ஞான ரூபாந்தரம் விதிக்கப்பெற்றது; தடுக்கமுடியாதது; ஏனெனில், அதன் உன்னதி இன்னும் பூர்த்தியாகவில்லை; மனம் அதன் உச்சிமுடியல்ல. ஆனால், அந்த ரூபாந்தரம் வந்து, உருவாகி, நிலைப்பதற்கு, விஞ்ஞான ஜோதி பொழியும்போது அதை மறுக்காமல் அறிவுறுதியுடன் வரவேற்றுக் கீழிருந்து அழைக்க வேண்டும். மேலிருந்து பரமன் ஆணையும் வேண்டும். இந்த **ஆணைக்கும்**, அழைப்பிற்குமிடையே நடுவகிக்கும் சக்தி தெய்வத்தாயின் ஸாநித்யமும், சக்தியுமேயாம். மனித முயற்சியல்ல; தவமல்ல; **அன்னையின் சக்தியொன்றே**, அடைப்பைத் திறந்து, திரையை நீக்கி, ஸத்பாத்திரத்தை உருவாக்கி, இருளும், பொய்யும், சாவும், துயருமான இவ்வுலகின்மிசை ஸத்தியம், ஜோதி, திவ்ய ஜீவனம், அமரானந்தம் இவற்றைக் கொணர்ந்து பொழியும்.

THE GOSPEL OF PERFECT LIFE

By Yogi Shuddhananda Bharati

A chosen garland of practical wisdom and spiritual experiences rich with the truth and rhythmic self-expressions of a long ingathered life. This is the Bible of New Humanity.

Rs. 3/8.

YOGI SHUDDHANANDA BHARATI

(A Study)

By Dewan Bahadur
K. S. Ramaswami Sastriar

This is a brilliant study of the many-sided genius and personality of Yogi Shuddhananda Bharatiar, by a great savant. The book is replete with chosen gems from the various works of the seer poet.

Rs. 4.

ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம்

ஸ்ரீ அரவிந்தர் சக்திமான், தெய்வச் சுடர், சித்த புருஷர், கவி யோகி, பாரதஜோதி. அவரைப் பற்றிய எல்லா விவரங்களையும் இந்த நூல் விரிவாக விளக்குகிறது.

விலை ரூ. 2-8.

பகவத் கீதை

பகவத் கிதை இந்தியாவின் பொதுமறை. அது மனிதனுக்கு ஆத்ம சக்தியும், கர்ம வீரமும் தரும் அரிய நூல், அதை மூலத்தில் உள்ளபடியே மிகத் தெளிவான நடையில் சுத்தானந்தர் மொழி பெயர்த்திருக்கிறார். கையடக்கமான பிரதி விலை ரூ. 1-4.

Apply to:-

PUDU YUGA NILAYAM
PONDICHERRY